## விருது நகர் மாவட்ட

# பட்டாசு ஆலையில் ஆய்வு செய்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!













வேலூர் மாவட்டம் அணைக்கட்டில் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலக கட்டிடத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நா.மதிவாணன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, ஒன்றியக் கழகச் செயலாளர் பி.வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வெம்பக்கோட்டை அகழாய்வில் தங்கத்தால் ஆன மணி!

### அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்!



விருதுநகர், நவ. 10-

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜய கரிசல்குளம் பகுதியில் இரண்டு கட்ட அகழாய்வு பணிகள் முடிவடைந்துள்ளன. அதில் 7,900க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்நிலையில், வெம்பக்கோட்டையில் மூன்றாம் கட்ட அகழாய்வு நடைபெற்று வருகிறது.

அகழாய்வு தொடர்பாக அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வெம்பக்கோட்டை அகழாய்வின்போது 1.28 மீட்டர் ஆழத்தில் 0.15 கிராம் எடையுள்ள தங்கத்தினால் ஆன மணி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். பல்லாயிரம் ஆண்டு காலமாகவே பொன்னும், பொருளும், அறிவும் நிறைந்த செழிப்பான மூத்த நாகரிகமாக தமிழர் நாகரிகம் இருந்தது என்பதற்கு மேலும் ஒரு சான்றாக தங்க மணி அமைந்துள்ளது என்றும் அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம் தெரிவித்துள்ளார்.

### உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி

## டி.ஒய்.சந்திரசூட் பணி ஓய்வுப்பெற்றார்!

புதுடெல்லி, நவ. 10 -

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் நேற்று முன்தினத்துடன் பணி ஓய்வு பெற்றார். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை உச்சநீதிமன்றத்திற்கு விடுமுறை என்பதால் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்டுக்கு நேற்று முன்தினம் கடைசி பணி நாள். வழக்கு விசாரணை களை நிறைவு செய்து பல வழக்குகளில் தீர்ப்பளித்தார்.

குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்த அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழக வழக்கிலும் தலைமை நீதிபதி சந்திசூட் தலைமையிலான 7நீதிபதிகள் கொண்ட அமர்வு தீர்ப்பளித்தது. அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம் சிறுபான்மையின அந்தஸ்து பெற்ற கல்வி நிறுவனம் தான் என இந்த அமர்வு தீர்ப்பளித்தது. ஓய்வு பெறும் தலைமை நீதிபதி சந்திரசூட்டுக்கு உச்சநீதி மன்றத்தில் பிரிவு உபச்சார விழா நடைபெற்றது. இனி தன்னால் எந்த தீர்ப்புகளையும் வழங்க முடியாது என உருக்கமுடன் பேசினார். புதிய தலைமை நீதிபதியாக பதவியேற்க உள்ள சஞ்சீவ் கன்னா கண்ணியமானவர் என பாராட்டுத் தெரிவித்தார்.

### கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமை! கழக பொதுக்குழு உறுப்பினர்

## எம்.ஜி. முத்து கணேஷின் புதிய இல்லம் புதுமனை புகுவிழா!

### அமைச்சர்கள் பழனிவேல் தியாகராஜன் - பி.மூர்த்தி மற்றும் மணிமாறன் முன்னிலை!

மதுரை, நவ. 10-

தி.மு.க. மாநில பொதுக் குழு உறுப்பினர் எம்.ஜி.முத்து கணேஷ் புதிய இல்லம் புதுமனை புகுவிழா நாளை (நவம்பர் 11 தேதி) இடம் கோபால்சாமி திருமண மண்டபத்தில் தலைமை மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன், உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம், கழக தணிக்கைக் குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தை வேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராம், தனச்செல்வம் ஆகியோர் முன்னலையில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், ராகவன், முருகவேல் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பெருமக்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாநில கழக நிர்வாகிகள் மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள் மேயர் துணை மேயர் பகுதி கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு வழக்கறிஞர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் பங்கேற்கின்றனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி, மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது. ஆறு மண்டலங்களைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், எஞ்சியுள்ள 5, 6, 9 ஆகிய மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்ட – மாநகர – மாநில நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில், கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | இடம் |
|---|---|---|---|
| 10/11/2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 5 | நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கூரப்பாளையம் பிரிவு, பெருந்துறை சாலை, பிச்சாண்டபாளையம், ஈரோடு – 638 052. |
| 10/11/2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 9 | கொடி அரங்கம், குதிரைசாரிகுளம் பிரிவு, நான்கு வழிச் சாலை, திருமங்கலம், மதுரை – 625 706. |
| 11/11/2024 திங்கள்கிழமை | காலை 9.00 மணி | 6 | சந்திரா ஏ.சி. ஹால், விவேரா கிராண்ட் ஹோட்டல், பழனி சாலை, திண்டுக்கல் – 624 001. |

மண்டலம் 5, 6, 9 – ஐ சேர்ந்த மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், தவறாமல் இப்பயிற்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 07-11-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி